# மாண்புமிகு துணை முதலமைச்சரும் கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 30.12.2025 அன்று கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில், அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.






• கோவையில் வனத்துறை சார்பில் நடைபெற்ற, தமிழ்நாடு வனப் படை நவீனமயமாக்கல் மற்றும் ஆயுதங்கள் வழங்கும் நிகழ்ச்சியில், சுமார் ரூ. 2.50 கோடி மதிப்பிலான அதிநவீன துப்பாக்கி உள்ளிட்ட பாதுகாப்புக் கருவிகளை வனப்படையினருக்கு வழங்கி, ரூ.19.50 கோடி மதிப்பிலான வன உயிரின இடமாற்றம் மற்றும் சிகிச்சை மையத்தைப் பயன்பாட்டுக்குத் தொடங்கிவைத்தார்.



• கும்கி யானைகளைப் பராமரிப்பதற்காக ரூ.8 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள சாடிவயல் யானைகள் முகாமைத் திறந்துவைத்து, ரூ. 2.60 கோடி மதிப்பிலான வனத்துறை மின்னணு ஆவணக் காப்பகம் மற்றும் இணையதளத்தின் பயன்பாட்டையும் தொடங்கிவைத்தார்.



• கோவை மாவட்டத்தில் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தந்த பொதுமக்களும் கழகத்தினரும் அளித்த உற்சாக வரவேற்பை ஏற்றுக் கொண்டார்.



• அண்மையில் மறைந்த, ஈரோடு மாவட்டம் பவானி நகர கழகச் செயலாளர் ப.சீ.நாகராசன் அவர்களின் இல்லம் சென்று, அவரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.




• கோவை ஆர்.எஸ்.புரத்தில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச ஹாக்கி ஸ்டேடியத்தை இன்று திறந்துவைத்தார்.




• கோவையில் நடைபெற்ற அரசு விழாவில், சுமார் 11 ஆயிரம் பயனாளிகளுக்கு, ரூ.137 கோடி மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி, ரூ.163 கோடி மதிப்பில் பணி நிறைவுபெற்ற திட்டங்களைத் திறந்து வைத்து, ரூ.32 கோடி மதிப்பிலான புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.




• ஈரோட்டில் நடைபெற்ற அரசு விழாவில், 14 மாவட்டங்களின் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு, முத்தமிழறிஞர் கலைஞர் பெயரிலான விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பை வழங்கினார்.